திருவண்ணாமலை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செய்முறைகள்

ந.க.எண்.2428 /அ1/2023 நாள். 27 .07.2023.

///

பொருள். தமிழ்நாடு அமைச்சுப்பணி ஜமுனாமரத்துர் வட்டாரக் கல்வி அலுவலகம் - இளநிலை உதவியாளார் திரு.து.நீதிதேவன் - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - சார்பு.

பார்வை. 1.தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்கநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ,சென்னை-6 ந.க.எண். 99801/அ4/2012 நாள். 25.04.2013

2. திருவண்ணாமலை, மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.524/அ1/2023 , நாள். 23/02/2013.

3.ஜமுனாமரத்துர், வட்டாரக் கல்வி அலுவலரின் கடித ந.க.எண்.524/அ1/2023 ,நாள். -02-2023

//////

பார்வை 1 ல் காணும் தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளராக நேரடி நியமனம் மூலம் நியமனம் செய்யப்பட்டு. 26.04.2013 முற்பகல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வரும் திரு.து.நீதிதேவன் என்பாரின் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் அவரது பெயருக்கு எதிரே கலம்(4)ல் குறிப்பிட்டுள்ள தேதியில் கீழ்காணும் நிபந்தனைகளுடன் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் பணிபுரியும் அலுவலகம் | இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | திரு.து.நீதிதேவன்,<br>இளநிலை உதவியாளர்<br>வட்டாரக் கல்வி அலுவலகம்,<br>ஜமுனாமரத்துர் | 26.04.2013 முற்பகல் | 26.04.2013 முற்பகல் |

1. பணிவரன்முறை செய்யப்படும் தேதியில் இருந்து மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டு பணிக்காலம் தகுதிகாண் பருவகாலமாக நிர்ணயிக்கப்படுகிறது.

2. தகுதிகாண் பருவகாலத்திற்குள் பவர்னிசாகர் அரசு அலுவலர் பயிற்சியினை முடித்து தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

3. தகுதிகாண் பருவம் முடித்து ஆணை பெற்ற பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதியஉயர்வுகள்வழங்கப்படவேண்டும்.

4. இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்யப்படும் தேதியில் இருந்து ஐந்தாண்டுகளுக்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெறவில்லை எனில் இளநிலை உதவியாளர் பதவியில் நீடிக்க இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

5. பணிவரன்முறை செய்யப்பட்ட விவரத்தினை உரியவரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்திடுமாறு சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு. அசல் பணிப்பதிவேடு

முதன்மைக் கல்வி அலுவலர்

திருவண்ணமலை

பெறுநர்

சார்ந்த பணியாளர்( அலுவலர் வழியாக)

நகல்

1. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) திருவண்ணாமலை
2. வட்டாரக் கல்வி அலுவலர், ஜமுனாமரத்தூர்